1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை ஆலையை மேலும் விஸ்தரிப்பு செய்வதா, அல்லது ஆரணி மற்றும் கும்பகோணத்தில் புதியதாக ஜரிகை ஆலைகள் அமைப்பதா, அல்லது தற்போது உள்ள ஜரிகை ஆலையின் கிளையாக அமைப்பதா, என்பது பற்றிய கருத்துரு கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. சின்னக்குழந்தை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கைத்தறித் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆரணியில் ஜரிகைத் தொழிற்சாலை அமைக்கப் போவதாக அறிவித்து, அதற்குண்டான இடங்களைப் பார்த்து, அது அப்படியே இருக்கிறது. இப்போது அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே ஆரணியிலே ஜரிகைத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆரணி, கும்பகோணம் ஆகிய இடங்களில் இடம் பார்க்கப்பட்டுள்ளது. இதற்கு அத்தியாவசியமான மூலப் பொருள் தங்கமாகும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவலரின் அனுமதி பெற்று நாம் அதைக் கொள்முதல் செய்யவேண்டும். பம்பாயில் உள்ள தங்கக் கட்டுப்பாட்டு அலுவரிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். அங்கேயிருந்து அனுமதி கிடைத்தவுடன் புதியதாக தொழிற்சாலை ஆரம்பிப்பதா அல்லது காஞ்சீபுரத்திலுள்ள ஜரிகை ஆலையின் கிளையாக ஆரம்பிப்பதா என்று அரசு முடிவெடுக்கும்.

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு
வீட்டை உரிமையாக்கும் திட்டம்.

20—*(வினா எண் 13011)—திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. எஸ். வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குடிசைமாற்று வாரிய வீடுகளில் குடியிருப்பவர்களுக்கு வீட்டை உரிமையாக்கும் திட்டம் உள்ளதா என்பதற்கு

'ஆம்' என்று பதில் கொடுத்தார்கள். நன்றி. இப்போது குடிசைகளில் இருக்கிறவர்கள் அதிகமாக இருப்பதால் புதிதாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வீடுகள் தொடர்ந்து கட்டிக் கொண்டுதான் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 13 கேள்விகள் இருக்கின்றன. எதையும் நிறுத்த வேண்டாம் என்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதிக் கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தொழில் பயிற்சி நிலையம்.

72—*(வினா எண். 6690) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தனித் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உடல் ஊனமுற்றவர் களுக்கு பயிற்சி அளிக்க தனி தொழிற் பயிற்சி நிலையம் ஏற் படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் போன்றவர்கள் மற்ற மாணவர்களுடன் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. எனவே தற்போது பரிசீலனையில் இல்லாமல் இருந்தாலும் கூட இப்படி உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வை யற்றவர்கள் போன்றவர்களுக்கு என்று அவர்கள் செய்கின்ற தொழிலிலே பயிற்சி பெறுவதற்கான ஒரு பயிற்சி நிலையத்தை உருவாக்க இனிமேலாவது அரசு பரிசீலிக்குமா?